
மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 03 வள்ளுவர் ஆண்டு 2055 ஐப்பசி 18 செவ்வாய்க்கிழமை 04.11.2025 கதிர் 360

யாழ் மண்ணிலிருந்து இணைய வெளிக்கு -
யாழ் முற்றம்
Yarl Muttram
Youtube Channel



# புதுடில்லியில் இன்று நிர்மலா - சஜித் சந்திப்பு!



புதுடில்லி, நவ. 04

இந்தியாவுக்குப் பயணம் மேற்கொண்டுள்ள எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, புதுடில்லியில் அமைந்துள்ள நிதி அமைச்சில் இந்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமனை இன்று சந்தித்துக் கலந்துரையாடினார்.

இந்தியா போன்ற பெரிய சந்தை வாய்ப்புகளை அணுகுவதன் மூலம் இலங்கையின் தொழில் துறையை வேகமாக முன்னேற்றம் காணச் செய்ய முடியும் என்று இந்திய நிதி அமைச்சர் இதன்போது தெரிவித்தார்.

வலுவான உள்நாட்டு தொழில் துறைகள் மூலம் இலங்கையின் பொருளாதார இறையாண்மையை மேம்படுத்திக்கொள்ள முடியும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

இலங்கையில் 2022 இல் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியின் போது இந்தியா வழங்கிய 4 பில்லியன் அமெரிக்க டொலர் ஒத்துழைப்புக்கு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தனது நன்றியை இதன்போது தெரிவித்தார்.

அத்துடன், ஒரு தனி நாடாக இலங்கைக்கு வழங்கிய மிகப் பெரிய நிதி மானியம் இதுவாகும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

7

# போதைப்பொருளுக்கு எதிரான சமரைக் கண்டு அஞ்சாதீர்கள்!

## சண்டியர்கள் நொண்டியர்களாக்கப்படுவார்கள் அடித்துக் கூறுகின்றார் அமைச்சர் சந்திரசேகர்

**யாழ்ப்பாணம், நவ. 04**

**"போதைப்பொருளுக்கு முடிவு கட்டுவதற்குரிய சமர் ஆரம்பமாகியுள்ளது. இந்தச் சமரைக் கண்டு அஞ்ச வேண்டாம். அதற்குப் பேராதரவு தாருங்கள். வடக்கு மண்ணில் இருந்து போதைப்பொருள் மாபியாக்கள் உட்பட குற்றச்செயல்களில் ஈடுபடும் தரப்புகளைத் துடைத்தெறிவோம்." - என்று கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்தார்.**

**யாழ்ப்பாணம் மாவட்ட செயலகம் மற்றும் சாவகச்சேரி பிரதேச செயலகம் இணைந்து நடத்திய நடமாடும் சேவை சாவகச்சேரி பிரதேச செயலகத்தில் இன்று செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.**

7



# யாழில் கோர விபத்தில் இளம் குடும்பஸ்தர் பலி!





யாழ்ப்பாணம், நவ. 04


யாழ். தெல்லிப்பழையில் நேற்று இரவு இடம்பெற்ற கோர விபத்தில் இளம் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

மேற்படி நபர் தனது மோட்டார் சைக்கிளில் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையிலிருந்து கீரிமலை நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்த வேளை கனரக வாகனத்தை முந்திச் செல்ல முற்பட்டபோது இந்த விபத்துச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மயிலிட்டியைச் சேர்ந்த வசந்த் (வயது 35)

7

# அம்பலாங்கொடையில் ஒருவர் சுட்டுக்கொலை!



அம்பலாங்கொடை, நவ. 04

அம்பலாங்கொடை நகர சபை வளாகத்துக்கு அருகில் இன்று காலை இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டில் வர்த்தகர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

கார் ஒன்றில் வந்த இனந்தெரியாத இருவரே துப்பாக்கிச்சூட்டை நடத்திவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர்.

துப்பாக்கிச்சூட்டில்

7

# யாழில் 950 கிலோ கஞ்சா தீயிட்டு அழிப்பு!

யாழ்ப்பாணம், நவ. 04

யாழ்ப்பாணத்தில் கடந்த காலங்களில் கைப்பற்றப்பட்ட 950 கிலோ கஞ்சா தீயிட்டு அழிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றம் மற்றும் மேலதிக நீதிவான் நீதிமன்ற நியாயாதிக்க எல்லைக்குள் கடந்த காலங்களில் பல்வேறு நடவடிக்கைகளின் போது மீட்கப்பட்ட கஞ்சா போதைப்பொருள் சான்றுப்பொருளாக நீதிமன்றத்தில் பாரப்படுத்தப்பட்டிருந்தது.

அது தொடர்பான வழக்கு விசாரணைகளைத் தொடர்ந்து 950 கிலோ

7





# வடகிழக்கில் நடைபெறும் கசிப்பு விற்பனையையும் அரசு கட்டுப்படுத்த வேண்டும் – சாணக்கியன் எம்.பி. வேண்டுகோள்



கொழும்பு, நவ.4

எதிர்வரும்வரவுசெலவுதிட்டத்தில் பெற்றோலியப் பொருட்கள் உட்பட பொருட்களுக்கான விலைகள் குறைக்கப்பட்டு மக்கள் நலன்சார்ந்த விடயங்களுக்கு அதிகளவான நிதியை ஒதுக்கீசெய்ய ஜனாதிபதி நடவடிக்கையெடுக்கவேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அரசாங்கம்போதைப்பொருளுக்கு எதிராக முன்னெடுக்கும் நடவடிக்கைகளை வரவேற்பதுடன் வடகிழக்கில் நடைபெறும் கசிப்பு விற்பனையையும் கட்டுப்படுத்த நடவடிக்கையெடுக்கவேண்டும் எனவும் அவர் வேண்டுகோள் விடுத்தார்.

களுவாஞ்சிகுடியில் உள்ள அவரது அலுவலகத்தில்நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனை தெரிவித்தார். இதன்போது மேலும் கருத்து தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர்,

விலைவாசிகளை குறைக்காமல், அரசாங்க ஊழியர்களுக்கு சம்பளத்தினை அதிகரிக்காமல் நாட்டில் மாற்றத்தினை ஏற்படுத்தமுடியாது.

தேசியமக்கள்சக்தி ஆட்சிக்குவந்து ஒரு வருடமாகிவிட்டது. ஒரு அரசாங்கம் ஆட்சிக்குவந்து முதலாவது வருடத்தில் செய்யாத விடயத்தினை அதன் பின்னர் வரும்காலங்களில் செய்வது சாத்தியமற்றதாகவேயிருந்து வருகின்றது.

வரவிருக்கின்ற பாதீட்டின் ஊடாக அரசாங்கம் வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றவேண்டும் என்ற கோரிக்கையினை நான் முன்வைக்கின்றேன்.

இலங்கையில் யார் அமைச்சர்களாகயிருக்கின்றார்கள் என்பது எங்களுக்கே தெரியாத நிலையில் அவர்களுக்கான அச்சுறுதல் என்பது இருப்பதற்கான வாய்ப்பில்லை.

யார் அமைச்சர்களாக உள்ளார்கள் என்பதை அவர்கள் எழுதி ஒட்டிக்கொண்டே இனிவரும் காலங்களில் வரவேண்டும். இல்லாதுவிட்டால் யார் அமைச்சர்கள் என்பதை தெரியாத நிலையே உள்ளது என தெரிவித்தார். (ஐ)

# பாடசாலை நேரம் அதிகரிப்பு அரசின் தன்னிச்சையான தீர்மானங்களை ஏற்கமுடியாது - முஜிபுர் எம்.பி குற்றச்சாட்டு

பாடசாலை நேரத்தை 30 நிமிடத்தால் அதிகரிப்பது குறித்து கல்வி அமைச்சரான பிரதமர் ஹரிணி அமரசூரிய பாராளுமன்றத்தில்விளக்கமளிக்க வேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தியின்பாராளுமன்றஉறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

பாடசாலை நேரத்தை 30 நிமிடத்தால் அதிகரிப்பது குறித்து பிரதமர் ஹரிணி அமரசூரிய கருத்து வெளியிட்டிருக்கின்றார்.

தொழிற்சங்கங்கள் இந்த தீர்மானம் குறித்து எதிர்ப்பினை வெளியிட்டுள்ளன.

அதிபர், ஆசிரியர்கள் உட்பட துறைசார்ந்தவர்களுடன் எவ்வித பேச்சுவார்த்தைகளையும் முன்னெடுக்காமல் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அரை மணித்தியாலயத்தால் பாடசாலை நேரத்தை அதிகரிப்பதாயின், அதற்கான அடிப்படை காரணியொன்று காணப்பட வேண்டும்.

அந்த காரணிகள் தொழிநுட்ப ரீதியானவையாக இருக்க வேண்டும். பெரும்பாலான மாணவர்கள் சுமார் 20 கிலோ மீற்றருக்கும் அதிக தூரம் பயணித்து பாடசாலைகளுக்கு வருபவர்களாக இருப்பர்.

ஏனைய பல மாணவர்கள் பாடசாலை நேரத்தின் பின்னர் விளையாட்டு உள்ளிட்ட வெளிக்கள செயற்பாடுகளில் பங்குபற்றுவார்கள். எனவே 30 நிமிடங்களால் நேரத்தை அதிகரிப்பதால் அவற்றிலும் சிக்கல்கள் ஏற்படும்.

மாணவர்களுக்கு கல்வி சாரா செயற்பாடுகளில் பங்கேற்பதற்கான வாய்ப்புக்கள் குறைவடையும்.

கல்வி அமைச்சரான பிரதமர் ஹரிணி அமரசூரிய இதுதொடர்பில் தொழிற்சங்கங்களுடன் பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்து, விளக்கமளிக்க வேண்டும்.

கல்வி தொடர்பான பாராளுமன்ற தெரிவுக்குழுவில் இது குறித்து நாம் கேள்வியெழுப்புவோம்.

அத்தோடு பாராளுமன்றத்திலும் பிரதமரிடம் இதற்கான விளக்கத்தைக் கோருவோம். நியாயமாக காரணியொன்றை அடிப்படையாக்க கொண்டு இந்த தீர்மானம் எடுக்கப்பட்டிருந்தால் அதனை ஏற்றுக்கொள்ள முடியும். என்றார்.

(ஐ)

SUHATHEHAM ATHULARSAALAI (PVT) LTD
சுகதேகம் ஆதுலர்சாலை (பீவீட்) எல்டீடி
Neithal Beach city, Navatkuli, Jaffna
Company No- PV0031448

சித்த, ஆயுர்வேத, மேற்கத்ய
இணைந்த மருத்துவ சேவை

Opening Hours - 9.00 am - 5.00 pm
Monday - Saturday

Treatment for Following Diseases
- Joint disorders சகல விதமான மூட்டுவாதங்கள்
- Paralysis பாரிசவாதம்
- Skin diseases தோல் நோய்கள்
- obesity உடற்பருமன்
- Gynecological problems - பெண்ணியல் நோய்கள்
- A norectal diseases மூல வருத்தம்
- Diabetic Mellitus நீரிழிவு
- Diabetic foot ulcers - நீரிழிவு புண்கள்
- Vericose vein Kidney stone சிறுநீரககல்
- Hypertension உயர்குருதியமுக்கம்
- cholesterol கொலஸ்திரோல்
- GGIT disorders சமிபாட்டுத் தொகுதியுடன் தொடர்பான நோய்கள்

இலவச மருத்துவ முகாம்
* போயா தினங்களில் காலை 9 மணி தொடக்கம் மாலை 5.30 மணி வரை நடைபெறும்.
* இலவசமாக குருதியமுக்கம் நிறை, உயரம், உடற்திணிவுச்சுட்டி என்பவற்றை அளவிட முடியும்

Special Treatments
- Full body Therapy
- Head Massage
- Foot Massage -
- Herbal Medicated Bath
- Decoction Bath
- Shirod hara
- skin care therapy
- Nasya
- wellness treatment through yoga & counselling
- Leech Therapy

அனைத்து விதமான குழந்தைகளுக்கான மூலிகைத் தாவரங்கள், கோரோசனை மாத்திரைகள், கிரந்தி எண்ணை என்பனவற்றை இங்கு பெற்றுக்கொள்ளலாம்

Other activities ஏனைய சேவைகள்
Nursery Garden -
Medicinal Plants (மூலிகை தாவரங்கள்)
Medicinal leach (லீச் அட்டை வளர்ப்பு)

Neithal Beach city
Amman Kovil Road,
Navatkuli Jafina

Contact No-0762942218

# ஜனாதிபதி பாதாளக் குழுக்களை ஊக்குவித்துவிட்டு மக்கள் மத்தியில் வீரனாக முயற்சி – சாகர குற்றச்சாட்டு

கொழும்பு, நவ.4

நாட்டில் போதைப்பொருள் வியாபாரம் மற்றும் பாதாளக் குழுக்களின் செயற்பாடுகளை ஊக்குவித்துவிட்டு ஜனாதிபதி தற்போது மக்கள் மத்தியில் வீரனாகுவதற்கு கடுமையான நடவடிக்கைகளை மேற்கொள்கிறார் என ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் காரியாலயத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

பாதாளக் குழுக்களை கைது செய்தல், போதைப்பொருட்களை கைப்பற்றல் பிரதான பேசுபொருளாக காணப்படுகிறது.

போதைப்பொருள் ஒழிப்புக்கு முன்னுரிமை வழங்குவதாக ஜனாதிபதி குறிப்பிடுகிறார். புதிய திட்டங்களும் அமுல்படுத்தியுள்ளார்.



போதைப்பொருள் மற்றும் பாதாளக் குழுக்களை ஒழிப்பதற்கு அரசாங்கம் எடுக்கும் நடவடிக்கைகளுக்கு நாங்கள் முழுமையான ஒத்துழைப்பு வழங்குவோம். ஆனால் இந்த விடயத்தில் ஜனாதிபதியின் உண்மைத்தன்மை சந்தேகத்துக்கிடமாக உள்ளது.

சுங்கத்தில் இருந்து பரிசோதனையின்றி விடுவிக்கப்பட்ட 323 கொள்கலன்கள் பற்றி இதுவரையில் உண்மை வெளிவரவில்லை. இலங்கைக்கு இரண்டு கொள்கலன்களில் ஐஸ் போதைப்பொருள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக சர்வதேச புலனாய்வு சேவை வழங்கிய புலனாய்வுத் தகவலையும் அரசாங்கம் அலட்சியப்படுத்தியது.

நாட்டில் போதைப்பொருள் வியாபாரம் மற்றும் பாதாளக் குழுக்களின் செயற்பாடுகளை ஊக்குவித்துவிட்டு ஜனாதிபதி தற்போது மக்கள் மத்தியில் வீரனாகுவதற்கு கடுமையான நடவடிக்கைகளை மேற்கொள்கிறார். கடந்த அரசாங்கங்களும் போதைப்பொருள் ஒழிப்புக்கான நடவடிக்கைகளை பிரபல்யப்படுத்தவில்லை.

அரசாங்கத்தின் முறையற்ற செயற்பாடுகளுக்கு எதிர்ப்பு தெரிவித்தே எதிர்வரும் 21 ஆம் திகதி பேரணியில் ஈடுபடவுள்ளோம். கொள்கையை அடிப்படையாகக் கொண்டு செயற்படுவதற்கு இது தேர்தலல்ல என்பதை எதிர்கட்சிகளுக்கு குறிப்பிட்டுக்கொள்கிறோம். ஜனநாயகத்தை பாதுகாக்க சகல எதிர்க்கட்சிகளும் ஒன்றிணைய வேண்டும் என்றார்.

## சங்குப்பிட்டி பாலத்தில் சடலமாக மீட்கப்பட்ட பெண்ணின் கொலை சம்பவம்– யாழைச் சேர்ந்த பிரதான சந்தேகநபர் கைது!

பூநகரி, சங்குப்பிட்டி பாலத்தில் சடலமாக மீட்கப்பட்ட பெண்ணின் கொலை சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணத்தை சேர்ந்த பிரதான சந்தேகநபர் கிளிநொச்சி மாவட்ட குற்றதடுப்பினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

பூநகரி, சங்குப்பிட்டி பாலத்துக்கு அருகில் கடந்த 12 ஆம் திகதி பெண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டிருந்த நிலையில், பொலிஸாரால் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வந்தன.

சடலமாக மீட்கப்பட்டவர் காரைநகர் பகுதியை சேர்ந்த 02 பிள்ளைகளின் தாயாரான 36 வயதான சுரேஷ்குமார் குலதீபா ஆவார்.

விசாரணையின் போது குறித்த பெண் கடந்த 11ஆம் திகதி வவுனியாவில் உள்ள தனது உறவினர் வீட்டுக்குச் செல்வதாக கூறி வீட்டிலிருந்து வெளியே சென்றதாக அவரது கணவர் பொலிஸாரிடம் தெரிவித்தார்.

எனினும் குறித்த பெண் தலையில் குத்தப்பட்டு, முகம் உள்ளிட்ட பகுதிகளில் எரியக்கூடிய திரவம் ஊற்றப்பட்டு எரிக்கப்பட்டு, கடலுக்குள் வீசப்பட்டிருந்தார்.

அவரது நுரையீரலில் நீர் புகுந்து, மூச்சுத்திணறலால் உயிரிழந்ததாக உடற்கூற்றாய்வில் தெரியவந்தது.

சம்பவம் தொடர்பில் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட மேலதிக விசாரணைகளின் போது மருந்தகம் ஒன்றின் உரிமையாளரும் உதவியாளரும் கொள்ளையிட்ட 30 இலட்சம் ரூபா பெறுமதியான தங்க நகைகளுடன் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கைதானவர்கள் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 51 வயதுடைய மருந்தகம் ஒன்றின் உரிமையாளர் மற்றும் 32 வயதுடைய அதே மருந்தகத்தின் உதவியாளரும் ஆவர்.

இந்நிலையில் யாழ்ப்பாணத்தை சேர்ந்த பிரதான சந்தேகநபர் கிளிநொச்சி மாவட்ட குற்றதடுப்பினரால் இன்று கைது செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## அரசுக்கு எதிரான நுகேகொடை பேரணியில் மகிந்த, ரணிலை களமிறக்க தீவிர முயற்சி

கொழும்பு, நவ.4



நுகேகொடையில் எதிர்வரும் 21 ஆம் திகதி நடைபெறவுள்ள தேசிய மக்கள் சக்தி அரசுக்கு எதிரான மக்கள் பேரணியில் முக்கிய அரசியல் புள்ளிகளைக் களமிறக்குவதற்குரிய முயற்சி எடுக்கப்பட்டு வருகின்றது.

முன்னாள் ஜனாதிபதிகளான மகிந்த ராஜபக்ச, மைத்திரிபால சிறிசேன, ரணில் விக்ரமசிங்க, கோட்டாபய ராஜக்ச மற்றும் முன்னாள் பிரதமர் தினேஷ் குணவர்தன ஆகியோரை களமிறக்குவதற்குரிய அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

மேற்படி பேரணியில் ஐக்கிய தேசியக் கட்சி, சுதந்திரக் கட்சி மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி என்பன பங்கேற்றாலும் அந்தக் கட்சிகளின் தலைவர்கள் பங்கேற்பார்களா என்பது பற்றி அறிவிப்பு வெளியாகவில்லை.

இந் நிலையிலேயே கூட்டத்தில் உரையாற்றாவிட்டாலும், வந்து அமர்ந்திருக்குமாறு இவர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாக தெரிய வருகின்றது.

நுகேகொடை பேரணியில் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி பங்கேற்காது என்பதால் அந்தப் பேரணியில் முக்கியத்துவம் குறையக்கூடாது என்பதற்காகவே இந்த நகர்வு முன்னெடுக்கப்படுகின்றது.

எனினும், மேற்படி தலைவர்கள் பங்கேற்பார்களா என்பது பற்றி இன்னும் அதிகாரபூர்வ தகவல் வெளியாக வில்லை. (ஐ)

## சரித ரத்வத்தே கைது!

*கொழும்பு, நவ. 04*

*நிதி அமைச்சின் முன்னாள் செயலாளரும் முன்னாள் பிரதமரின் மூத்த ஆலோசகருமான சரித ரத்வத்தே இன்று கைது செய்யப்பட்டுள்ளார்.*

*இலஞ்ச, ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரிக்கும் ஆணையத்தால் அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.*

*உரிய நடைமுறையை மீறி 2015ஆம் ஆண்டில் எந்தவொரு அவசியமும் இன்றி அரச வணிகக் கூட்டுத்தாபனத்தின் ஊடாக 9 கோடி ரூபாவுக்கும் அதிக நிதியைச் செலவிட்டு 50 தற்காலிக நெல் களஞ்சியங்களை இறக்குமதி செய்தமை தொடர்பில் முன்னெடுக்கப்பட்டுள்ள விசாரணைகளுக்கமைய சரித ரத்வத்தே கைது செய்யப்பட்டுள்ளார்.*

## முல்லைத்தீவில் சுவர் இடிந்து வீழ்ந்ததில் இராணுவச் சிப்பாய் ஒருவர் உயிரிழப்பு!

*முல்லைத்தீவு, நவ. 04*

*முல்லைத்தீவு, முள்ளியவளையில் உள்ள 59 ஆவது படைப்பிரிவு முகாமில் கைவிடப்பட்ட கட்டடத்தின் செங்கல் சுவர் இடிந்து வீழ்ந்ததில் இராணுவச் சிப்பாய் ஒருவர் உயிரிழந்துள்ளார். அத்துடன் மேலும் 3 இராணுவச் சிப்பாய்கள் காயமடைந்துள்ளனர்.*

*இந்தத் தகவலை பொலிஸ் ஊடகப் பிரிவு இன்று தெரிவித்துள்ளது.*

*குருநாகலைச் சேர்ந்த 24 வயதுடைய இராணுவச் சிப்பாயே உயிரிழந்துள்ளார்.*

*சம்பவம் இடம்பெற்றபோது உயிரிழந்த சிப்பாயும், காயமடைந்த 3 சிப்பாய்களும் விறகு சேகரித்துக் கொண்டிருந்தனர் என்று பொலிஸார் தெரிவித் துள்ளனர்.*

*காயமடைந்த சிப்பாய்கள் மூவரும் மாஞ்சோலை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.*

## நாட்டில் நாளை சுனாமி தயார்நிலை ஒத்திகை நடத்த திட்டம்!

*இலங்கையில் தேர்ந்தெடுக்கப்பட்ட 5 மாவட்டங்களில் நாளையதினம் (5) இந்தியப் பெருங்கடல் சுனாமி தயார்நிலை ஒத்திகையை நடத்த திட்டமிட்டுள்ளது.*

*உலக சுனாமி விழிப்புணர்வு தினத்தை முன்னிட்டு, இந்திய பெருங்கடல் சுனாமி எச்சரிக்கை மையத்தின் கீழ் 28 நாடுகளை உள்ளடக்கிய பிராந்திய அமைப்பினால் இந்த ஒத்திகை ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.*

*யுனெஸ்கோவின் அதிகாரப்பூர்வ வழிகாட்டுதல்களின் கீழ் நடத்தப்படும் இந்தப் ஒத்திகையானது யாழ்ப்பாணம், காலி, மட்டக்களப்பு, களுத்துறை மற்றும் மாத்தறை மாவட்டங்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட கிராம சேவகர் பிரிவுகளில் நடத்தப்பட வுள்ளது.*

*இந்தப் ஒத்திகையை உண்மையான சுனாமி அச்சுறுத்தல் எனக் கருதி அச்சமடையவோ அல்லது தவறாகப் புரிந்து கொள்ளவோ வேண்டாம் என அனர்த்த முகாமைத்துவ நிலையம் பொதுமக்களை கேட்டுக்கொண்டுள்ளது.*

## கிண்ணியாவில் மாடுகள் மீது வாள் வெட்டு ஈவிரக்கமற்றவர்களின் செயல்

*திருகோணமலை கிண்ணியா பிரதேசத்தில் மேய்ச்சல் தரைக்கான உரிமைப் போராட்டத்தின் விளைவாக மாடுகள் தொடர்ச்சியாக வாள் வெட்டுக்கு இலக்காகும் சம்பவங்கள் குறித்து முறைப்பாடுகள் செய்யப்பட்டதைத் தொடர்ந்து, இரண்டு சந்தேக நபர்களைக் கிண்ணியா பொலிஸார் கைது செய்துள்ளனர்.*

*கால்நடை வளர்ப்பாளர்களுக்கும் வேளாண்மை விவசாயிகளுக்கும் இடையேயான நீண்டகால நிலப் பிரச்சினை வன்முறையாக மாறியிருந்த நிலையில், பொலிஸாரின் இந்த நடவடிக்கை கால்நடை உரிமையாளர்கள் மத்தியில் சற்று ஆறுதலை ஏற்படுத்தியுள்ளது.*

*கடந்த 20 ஆம் திகதி, மேய்ச்சல் தரைப் போராட்டத்தின் உச்சகட்டமாக 30 மாடுகள் வாள் வெட்டுக்கு இலக்கானது.*

*ஆரம்ப முறைப்பாடு மீது உடனடி நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்று கால்நடை உரிமையாளர்கள் அதிருப்தி தெரிவித்திருந்தனர். இதன் தொடர்ச்சியாக, நேற்று இரவு கிண்ணியா குரங்குபாஞ்சான் இரட்டைக்குளம் பகுதியில் மீண்டும் தாக்குதல் நடந்தது.*

*நேற்றிரவு மேலும் நான்கு மாடுகள் வாள் வெட்டுக்கு இலக்காகியுள்ளன. அதேவேளை, இரண்டு மாடுகள் காணாமல் போயுள்ளதாக மாட்டு உரிமையாளர் தெரிவித்துள்ளார்.*

*தொடர்ச்சியான வன்முறைச் சம்பவங்கள் மற்றும் முறைப்பாடுகளுக்குப் பின்னர், கிண்ணியா பொலிஸார் விரிவான விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.*

*பாதிக்கப்பட்ட கால்நடை வளர்ப்பாளர்கள் முறைப்பாடு செய்த சில மணிநேரங்களுக்குள், இச்சம்பவம் தொடர்பாக இரண்டு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர்.*

*சம்பவம் குறித்த மேலதிக விசாரணைகளை கிண்ணியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)*

# கோவை கொடூர குற்றச் செயலை கண்டிக்க கடுஞ்சொல்லும் போதாதது : முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பதிவு



கோவை கொடூர குற்றச் செயலை கண்டிக்க கடுஞ்சொல்லும் போதாதது என்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள பதிவில், "கோவையில் இளம்பெண்ணுக்கு நிகழ்ந்த துயரம் மனிதத்தன்மையற்றது இத்தகைய கொடூர குற்றச்செயல்களைக் கண்டிக்க எந்தக் கடுஞ்சொல்லும் போதாது.இதில் ஈடுபட்ட குற்றவாளிகள் கண்டுபிடிக்கப்பட்டு, உடனடியாகக் கைது செய்யப்பட்டுள்ளனர். ஒரு மாதத்திற்குள் குற்றப்பத்திரிகையைத் தாக்கல் செய்து, அவர்களுக்கு அதிகபட்ச தண்டனையை விரைந்து பெற்றுத் தர, காவல்துறையினருக்கு உத்தரவிட்டுள்ளேன்.

மேலும் நம் மகளிர் அனைத்துத் துறைகளிலும் அடையும் முன்னேற்றம்தான் இத்தகைய வக்கிர மிருகங்களின் ஆணாதிக்க மனநிலைக்கு முற்றுப்புள்ளி வைக்கும் முழுமையான முற்போக்குச் சமூகமாக நாம் மாறுவதற்கு வழிவகுக்கும்,"இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. கோவையில் கல்லூரி மாணவி கூட்டுப் பாலியல் வன்கொடுமை சம்பவத்தில் தொடர்புடைய 3 பேரை தனிப்படை போலீஸார் துப்பாக்கியால் காலில் சுட்டுப் பிடித்தனர். பிடிபட்ட 3 பேரும் கோவை அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.(ஐ)

## உலகக் கோப்பை கிரிக்கெட் தொடரில் 'தொடர் நாயகி' விருது வென்ற தீப்தி சர்மாவுக்கு DSP பதவி!






உலகக் கோப்பை கிரிக்கெட் தொடரில் 'தொடர் நாயகி' விருது வென்ற தீப்தி சர்மாவுக்கு, உத்தரப் பிரதேச முதலமைச்சர் யோகி ஆதித்யநாத் திறமையையும் சாதனைகளையும் அங்கீகரிக்கும் 'குஷல் கிலாடி யோஜனா' திட்டத்தின் கீழ் காவல்துறை டி.எஸ்.பி. (DSP) பதவியை வழங்கினார்.

நவி மும்பையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற மகளிர் ஒருநாள் உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டியின் இறுதி ஆட்டத்தில் இந்திய அணி வெற்றி பெற்று முதல்முறையாக சாம்பியன் பட்டத்தை வென்றது.

இத்தொடரில் சிறப்பாக விளையாடிய உத்தரப் பிரதேச மாநிலத்தைச் சேர்ந்த தீப்தி சர்மா, 212 ரன்கள் குவித்து 22 விக்கெட்டுகளை கைப்பற்றி இந்தியா உலகக் கோப்பை வெல்வதற்கு முக்கிய காரணமாக இருந்தார். இறுதி ஆட்டத்தில் 58 ரன்கள் விளாசிய தீப்தி சர்மா, 5 விக்கெட்டுகளை வீழ்த்தினார். மேலும், தொடர் நாயகி விருதையும் வென்று அசத்தினார்.

இந்நிலையில் உத்தரப் பிரதேச முதல்வர் யோகி ஆதித்யநாத்தின் திறமைமிகு வீரர் திட்டத்தின் கீழ், தீப்தி சர்மாவை காவல்துணைக்கண்காணிப்பாளராக நியமித்து கௌரவிப்பதாக அம்மாநில காவல்துறை தலைவர் அறிவித்துள்ளார். (ஐ)

## ராஜராஜ சோழன் கட்டிய சிவன் கோயில் கருவறையில் தங்க புதையல்



திருவண்ணாமலை மாவட்டம் ஜவ்வாதுமலையில் உள்ள கோவிலூர் பகுதியில் மூன்றாம் ராஜராஜ சோழன் ஆட்சி காலத்தில் கட்டப்பட்ட திருமூலநாதர் சிவன் கோயில் உள்ளது.. இந்து சமய அறநிலையத்துறை மூலம் கோயில் புனரமைப்பு பணிநடக்கிறது. கோயிலின் கருவறை பகுதியில் நேற்று பள்ளம் தோண்டியபோது பானை ஒன்று தென்பட்டது. அதில் 103 தங்க நாணயங்கள் இருந்தன. அவை எந்த காலத்தை சேர்ந்தது என தொல்லியல் துறை அதிகாரிகள் ஆய்வு செய்கின்றனர். (ஐ)

## கன்னியாகுமரி மாவட்டம் தோவாளை மலர் சந்தையில் பூக்களின் விலை குறைந்தது..!

கன்னியாகுமரி மாவட்டம் தோவாளை மலர் சந்தையில் பூக்களின் விலை குறைந்துள்ளது. நேற்று முன்தினம் ஒரு கிலோ ரூ.1,000க்கு விற்ற பிச்சி, மல்லிகை பூ முறையே ரூ.500 மற்றும் ரூ.400க்கு விற்பனை செய்யப்படுகிறது. சுபமுகூர்த்த தினங்கள் இல்லாததால் பூக்கள் விலை குறைந்துள்ளதாக வியாபாரிகள் தகவல் தெரிவித்தனர். (ஐ)



## தவெக மகளிரணி, இளைஞரணி நிர்வாகிகள் நியமனம்



தமிழக வெற்றிக்கழகத்தின் தலைவர் விஜய் நேற்று வெளியிட்ட அறிக்கை: முதற்கட்டமாக, 64 கழக மாவட்டங்களுக்கு, மாவட்ட அளவிலான நிர்வாகிகள் நியமனம் செய்யப்படுகிறார்கள். தொண்டரணி, மாணவரணி, இளைஞரணி, மகளிரணிக்கு பல்வேறு மாவட்டத்துக்கு நிர்வாகிகள் தேர்வாகியுள்ளனர்.

தொண்டரணிக்கு தேர்வான நிர்வாகிகள் விவரம்:

சென்னை கிழக்கு மாவட்டம்: மாவட்ட செயலாளர் – ஜி.பாலமுருகன். அமைப்பாளர் – பி.முருகன். இது தவிர 10 இணை அமைப்பாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். சென்னை தெற்கு (தெற்கு) மாவட்டம்: மாவட்ட செயலாளர் – கே.வி.தாமோதரன். அமைப்பாளர் – ஆர்.கார்த்திக். சென்னை தெற்கு (வடக்கு) மாவட்டம்: மாவட்ட செயலாளர் – அப்புனு என்கிற வேல்முருகன். அமைப்பாளர் – வேலுச்சாமி. சென்னை மத்திய மாவட்டம்: மாவட்ட செயலாளர் – குமார். அமைப்பாளர் – பாலமுருகன். சென்னை மத்தியம் (தெற்கு) மாவட்டம்: மாவட்ட செயலாளர் – திலீப்குமார். அமைப்பாளர் – சதீஷ்குமார். சென்னை மத்தியம் (மேற்கு) மாவட்டம்: மாவட்ட செயலாளர் – பழனி என்கிற பழனியப்பன். அமைப்பாளர் – அரிபாபு. சென்னை வடக்கு (கிழக்கு) மாவட்டம்: மாவட்ட செயலாளர் – வேலு. அமைப்பாளர் – இசக்கிராஜ். திருவள்ளூர் தென்மேற்கு மாவட்டம்: மாவட்ட செயலாளர் – பிரபு. அமைப்பாளர் – சுரேஷ்.

சென்னை கிழக்கு மாவட்டம்: மாவட்ட செயலாளர் – பாலமுருகன். அமைப்பாளர் – ரமேஷ். சென்னை புறநகர் மாவட்டம்: மாவட்ட செயலாளர் – சரவணன். அமைப்பாளர் – ஹரீஷ். சென்னை மத்திய மாவட்டம்: மாவட்ட செயலாளர் – குமார். அமைப்பாளர் – மணிவண்ணன். சென்னை மத்தியம் (மேற்கு) மாவட்டம்: மாவட்ட செயலாளர் – பழனி என்கிற பழனியப்பன். அமைப்பாளர் – மூர்த்தி. சென்னை வடக்கு (கிழக்கு) மாவட்டம்: மாவட்ட செயலாளர் – வேலு. அமைப்பாளர் – கருப்பசாமி பாண்டியன். சென்னை வடக்கு மாவட்டம்: மாவட்ட செயலாளர் – பல்லவி. அமைப்பாளர் – சதீஷ். திருவள்ளூர் தென்மேற்கு மாவட்டம்: மாவட்ட செயலாளர் – பிரபு. அமைப்பாளர் – ஜிதேந்தர் குமார்.

இளைஞரணிக்கு தேர்வான நிர்வாகிகள் விவரம்:

சென்னை கிழக்கு மாவட்டம்: மாவட்ட செயலாளர் – பாலமுருகன். அமைப்பாளர் – அஸ்லாம் யாசீர். சென்னை தெற்கு (தெற்கு) மாவட்டம்: மாவட்ட செயலாளர் – தாமோதரன். அமைப்பாளர் – விஜய். சென்னை தெற்கு (மேற்கு) மாவட்டம்: மாவட்ட செயலாளர் – சபரிநாதன். அமைப்பாளர் – உமர் பாரூக். சென்னை தெற்கு (வடக்கு) மாவட்டம்: மாவட்ட செயலாளர் – வேல்முருகன். அமைப்பாளர் – சுரேந்தர். சென்னை மத்தியம் (மேற்கு) மாவட்டம்: மாவட்ட செயலாளர் – பழனியப்பன். அமைப்பாளர் – பரமேஸ்வரன். சென்னை வடக்கு (கிழக்கு) மாவட்டம்: மாவட்ட செயலாளர் – வேலு. அமைப்பாளர் – கவுதமன். சென்னை வடமேற்கு மாவட்டம்: மாவட்ட செயலாளர் – தணிகாசலம். அமைப்பாளர் – லோகேஷ் குமார்.

மகளிரணிக்கு தேர்வான நிர்வாகிகள் விவரம்:

சென்னை கிழக்கு மாவட்டம்: மாவட்ட செயலாளர் – பாலமுருகன். அமைப்பாளர் – மதுமிதா. சென்னை தெற்கு (தெற்கு) மாவட்டம்: மாவட்ட செயலாளர் – தாமோதரன். அமைப்பாளர் – தேவி. சென்னை தெற்கு (மேற்கு) மாவட்டம்: மாவட்ட செயலாளர் – சபரிநாதன். அமைப்பாளர் – காயத்ரி. சென்னை தெற்கு (வடக்கு) மாவட்டம்: மாவட்ட செயலாளர் – வேல்முருகன். அமைப்பாளர் – வனிதா. சென்னை புறநகர் மாவட்டம்: மாவட்ட செயலாளர் – சரவணன். அமைப்பாளர் – சகாயமேரி. திருவள்ளூர் வடக்கு மாவட்டம்: மாவட்ட செயலாளர் – விஜயகுமார். அமைப்பாளர் – இந்திய ராணி.(ஐ)



# சுற்றுப்புற தூய்மை

நம்மையும் வீட்டையும் சுத்தமாக வைத்திருக்கவேண்டுமென நினைக்கும் நம்மில் எத்தனை பேர் நாட்டை சுத்தப்படுத்த வேண்டுமென்று நினைக்கிறோம்...?? பத்து சதவீதத்தினர் மட்டுமே நினைத்து பார்ப்போம். நாம் வசிக்கும் தெருவில் பத்து நாட்களாய் கழிவு நீர் வடிந்துகொண்டிருக்கிறது. எத்தனை பேர் மாநகராட்சி அலுவலகத்தில் சென்று புகார் கொடுத்திருப்போம்..?! யாராவது புகார் கொடுப்பார்கள் என்று அந்த இடத்தை விட்டு கடந்து சென்று விடுவோம். இதே நமது வீட்டில் இப்படி நடந்தால் விட்டு விடுவோமா..?? நேராக மாநகராட்சி அலுவலகம் சென்று கையோடு ஆட்களை அழைத்து வந்து சரி செய்வோம்.

பூமியில் வெப்பம் அதிகரித்து காணப்படுவதற்கு முக்கிய காரணம் காடுகளை அழிப்பதுதான். பூமியில் வெப்பம் அதிகமாவதால் பனிமலைகள் உருகி கடல் மட்டம் உயர்ந்து வருகிறது. வீட்டிற்கு ஒரு மரம் வளர்க்க வேண்டுமென்கிறார்கள். என்னை கேட்டால், பூமியில் பிறந்ததற்கு ஒரு மரத்தையாவது வளர்த்து விட்டுப்போக வேண்டும் என்பேன். நாம் எந்த ஒரு பெரிய சாதனையையும் செய்து விட வேண்டாம். ஒரு மரத்தை நன்கு பராமரித்து வளர்த்தாலே போதும். பூமியில் குறைந்து கொண்டு வரும் ஆக்ஸிஜன் அதிகரித்து விடும்.

அமெரிக்காவில் விஷக் கழிவுகளை பொது இடங்களில் கொட்டினால் ஒன்றே கால் கோடி ரூபாய் அபராதம் விதிக்கப்படுகிறது, வாகனங்களுக்கு வருடம் தோறும் புகைப்பரிசோதனை செய்யப்படுகிறது. சுற்றுப்புற தூய்மைக்கெல்லாம் அபராதம் போட்டால்தான் செய்வேன் என்றால் நமக்கு பின்வரும் சந்ததியினர் குறைகளோடுதான் பிறப்பார்கள்.

நாம் உயிர் வாழ்வதற்கு முக்கிய ஆதாரமாக இருப்பது தண்ணீர். எப்படி தாய் பாலில் கலப்படம் செய்தால் அதற்கு பயன் இல்லையோ, அதே போல் குடி தண்ணீரில் கலப்படம் செய்தாலும் பயன்படுத்த முடியாது. மூன்று விழுக்காடு தண்ணீர் இருக்கும் பூமியில் ஒரு விழுக்காடு தண்ணீர் மட்டுமே பயன்படுத்த முடிகிறது. அந்த தண்ணீரையும் மாசு படுத்தி வருகிறோம். நொய்யல், காவேரி, பாலாறு போன்ற நதிகளை சாயப்பட்டறை மூலமாக மாசு படுத்தி விட்டோம். இருபது வருடங்களுக்கு முன்பு சிறப்பாக பாய்ந்து ஓடிக்கொண்டிருந்த நதிகளை எல்லாம் இப்பொழுது பார்க்க முடிவதில்லை. மணல் கொள்ளை மூலமாக மணல்களை எடுப்பதால் நிலத்தடி நீர் ஆழம் இன்னும் அதிகமாகிக் கொண்டு போகிறது. மேலும் தண்ணீர் தொழிற்சாலை மூலமாக பல்லாயிரக்கணக்கான அடிகள் தோண்டி நிலத்தடி நீரை எடுத்து வெளிமாநிலத்திற்கு அனுப்பி பணம் சம்பாதித்து கொண்டிருக்கிறார்கள்.

மட்டுமே மிஞ்சும். வருங்கால சந்ததியினர் இருக்க மாட்டார்கள். புவி வெப்பமயமாவதை தடுப்பதற்கு மழை நீர் சேகரிப்பு அவசியமாகிறது. வருடாவருடம் மழை நீர் சேகரிக்கும் குழாய்களை சரி பார்க்க வேண்டும். தமிழக அரசு மழை நீர் சேமிப்பு திட்டம் செயல் படுத்திய போது





அனைவரும் செயல் படுத்தினர். ஆனால், இப்பொழுது அனைவரும் மறந்த நிலையில் தான் உள்ளோம்.

எல்லாவற்றிற்கும் அரசு சட்டம் இயற்றி கட்டாயப்படுத்த வேண்டும் என நினைக்காமல் நமக்கான வாழ்வாதார பிரச்சனை அதை நாம் தான் சரி செய்து கொள்ள வேண்டும். அனைவரும் தெரிந்தே பூமியை மாசு படுத்துவதில்லை. தொண்ணூறு சதவீதத்தினர் தெரியாமல் தான் புவியை மாசு படுத்திகொண்டிருக்கிறோம். அதன் வீரியத்தையும், விளைவுகளையும் நாம் அறிந்திருக்கவில்லை. நாம் பயன்படுத்திய குப்பையில் போடும் பிளாஸ்டிக் பொருட்கள் 200 ஆண்டுகள் அப்படியே அழியாமல் இருக்கும். முடிந்த வரை பிளாஸ்டிக் பயன் படுத்துவதை தவிர்க்கலாம், தேவைஏற்பட்டால் மட்டுமே பிளாஸ்டிக் பயன் படுத்தவேண்டும், டீ குடிக்கவும் தண்ணீர் குடிக்கவும் பிளாஸ்டிக் பொருட்களை பயன் படுத்தாமல் காகிதம் கண்ணாடி போன்ற பொருட்களை பயன்படுத்தலாம். அதி வேகமாய் பூமியை மாசு படுத்தி விட்டோம். அதை விரைவில் சரி செய்து விட முடியாது. சிறுக சிறுக தான் சரி செய்ய முடியும், இதில் அரசாங்கம் என்ன செய்யும என்று நினைக்காமல் நம்மால் முடிந்த விஷயங்களில் பூமியை பாதுகாப்போம்.

மணல் கொள்ளையை தடுப்போம். முடித்தால் வழக்கு தொடரலாம் மணல் எடுக்க கூடாதென்று. தண்ணீரை சிக்கனமாய் பயன் படுத்துவோம். எங்காவது தண்ணீர் வீணாக போய் கொண்டிருந்தால் அதை சரி செய்வோம்.

மழை நீரை சேகரிப்போம்.

நம்மால் முடிந்தவரை எத்தனை மரம் வளர்க்க முடியுமோ அத்தனை மரங்கள் வளர்ப்போம்.

இன்றே உறுதி மொழி எடுத்து கொள்வோம். ஆளுக்கு ஒரு மரம் நட்டு வைத்து அதை பராமரிப்போம்... நமது வீட்டில் ஒரு குழந்தை பிறந்தால் அவர்கள் நினைவாக ஒரு மரம் நட்டு வைத்து, அந்த குழந்தைக்கு மரம் வளர்ப்பதன் அவசியத்தை சொல்லி சொல்லியே குழந்தைகளுக்கு இயற்கை மற்றும் மரங்கள் பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்தலாம். இப்படி சின்ன சின்ன விஷயங்களை செய்தாலே மேலும் வெப்பமயமாவதிலிருந்தும், மாசடைவதிலிருந்தும் பூமியை காப்பாற்றிவிடலாம்.

# சீனா, பாக்.,செய்கின்ற அணு ஆயுத சோதனையை நியாயப்படுத்தும் டிரம்ப்



பாகிஸ்தான், சீனா உள்ளிட்டவை அணு ஆயுதங்களை சோதனை செய்கின்றன. அமெரிக்காவும் தனது சொந்த அணு ஆயுதங்களை சோதனை செய்யும் என்று அதிபர் டிரம்ப் தெரிவித்துள்ளார். கடந்த வாரம் அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப், சீன அதிபர் ஜீ ஜின்பிங்கை சந்தித்து பேசினார். முன்னதாக அதிபர் டிரம்ப் கூறுகையில், போட்டி சக்திகளுடன் சம அடிப்படையில் இருக்கும் வகையில் அமெரிக்காவும் அணு ஆயுத சோதனையை தொடங்கும் என்று அறிவித்து இருந்தார்.

இந்நிலையில் நேற்று முன்தினம் பேட்டி ஒன்றில் அதிபர் டொனால்ட் டிரம்ப், ஷஷ"ரஷ்யா, சீனா, வடகொரியா மற்றும் பாகிஸ்தான் நாடுகள் அணு ஆயுத சோதனை செய்யும் நாடுகள். ரஷ்யா அணு ஆயுத சோதனையை செய்கிறது. சீனா சோதனை செய்கிறது. ஆனால் அவர்கள் அதனைப்பற்றி பேசுவதில்லை. அவர்கள் எங்கு சோதனை செய்கிறார்கள் என்பது உங்களுக்குத் தெரியாது. அவர்கள் நிலத்தடியில் சோதனை செய்கிறார்கள். அங்கு சோதனையில் என்ன நடக்கிறது என்பது மக்களுக்கு சரியாக தெரியாது. உங்களுக்குத் தெரியும். நாங்கள் ஒரு திறந்த சமூகம். நாங்கள் வித்தியாசமானவர்கள். நாங்கள் அதனைப்பற்றி பேசுகிறோம். நாங்களும் அணு ஆயுதங்களை சோதிக்கப் போகிறோம். ஆயுதங்களின் நம்பகத்தன்மையை உறுதி செய்வதற்காக சோதனை அவசியமாகும்" என்றார். (ஐ)

## கொலையான கணவரின் சாயலில் இருப்பதாக கூறி துணை அதிபரை கட்டி தழுவிய பெண்ணால் சர்ச்சை: அமெரிக்க அரசியலில் பரபரப்பு





கணவர் கொல்லப்பட்ட துக்கத்தில் இருந்து மீளாத பெண், அமெரிக்கத் துணை அதிபருடன் பொது மேடையில் நெருக்கமாகக் கட்டித்தழுவிய நிகழ்வு பெரும் புயலைக் கிளப்பியுள்ளது.

அமெரிக்காவின் பிரபல அரசியல் ஆர்வலரும், 'டர்னிங் பாயிண்ட் யுஎஸ்ஏ' அமைப்பின் நிறுவனருமான சார்லி கிர்க், கடந்த செப்டம்பர் 10ம் தேதி படுகொலை செய்யப்பட்டார். அவரது மறைவுக்குப் பிறகு, அந்த அமைப்பின் புதிய தலைமைச் செயல் அதிகாரியாக அவரது மனைவி எரிகா கிர்க் பொறுப்பேற்றார். இந்தச் சூழலில், கடந்த அக்டோபர் 29ம் தேதி மிசிசிப்பி பல்கலைக்கழகத்தில் நடந்த அமைப்பின் நிகழ்வில் அவர் முதன்முறையாகப் பங்கேற்றார். அப்போது, சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட அமெரிக்கத் துணை அதிபர் ஜே.டி. வேன்ஸை அறிமுகப்படுத்திப் பேசினார். கண்ணீருடன் உணர்ச்சிவசப்பட்டுப் பேசிய எரிகா, 'எனது கணவரின் இடத்தை யாராலும் நிரப்ப முடியாது. ஆனால், துணை அதிபர் ஜே.டி. வேன்ஸிடம், என் கணவரின் சில சாயல்களைக் காண்கிறேன்' என்று குறிப்பிட்டார்.

இதைத்தொடர்ந்து மேடைக்கு வந்த வேன்ஸை, எரிகா நீண்டநேரம் கட்டித்தழுவினார். வேன்ஸின் இடுப்புப் பகுதியில் எரிகாவின் கைகளும், எரிகாவின் தலையைக் கோதியபடி வேன்ஸின் கைகளும் இருந்தன. இந்தக் காணொலி சமூக வலைதளங்களில் தீயாகப் பரவி, பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியது. கணவரை இழந்த பெண், திருமணமான ஒருவருடன் இவ்வாறு நடந்துகொள்வது முறையல்ல எனப் பலரும் விமர்சித்தனர். இருவருக்கும் இடையே தொடர்பு இருப்பதாக வதந்திகள் பரவத் தொடங்கின. இந்த விவகாரம் குறித்து ஊடக நேர்காணல் ஒன்றில் பதிலளித்த எரிகா, 'எனது ஒவ்வொரு அசைவையும் கேமராக்கள் ஆராய்கின்றன. என் கணவர் கொல்லப்பட்டதையும், நாங்கள் துக்கத்தில் இருந்ததையும் படம் பிடித்தார்கள்.

இப்போது நான் சிரித்தால் கூட சர்ச்சையாக்குகிறார்கள். ஆனால், என் கணவரைக் கொன்றதாகக் குற்றம் சாட்டப்பட்ட டைலர் ராபின்சனின் நீதிமன்ற விசாரணையை மட்டும் முழுமையாகப் பதிவுசெய்யக் கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றன. அங்கு வெளிப்படைத்தன்மைக்காக கேமராக்களை அனுமதிக்க வேண்டும்' எனக் கூறி, தன் மீதான விமர்சனங்களுக்குப் பதிலடி கொடுத்துள்ளார். அமெரிக்க துணை அதிபர் ஜே.டி. வேன்ஸ், இந்திய வம்சாவளியான உஷாவின் மதம் குறித்து பேசியது சர்ச்சையான நிலையில், தற்போது இந்த விவகாரம் அமெரிக்காவில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. (ஐ)

## 45 பாலஸ்தீனர் உடல்களை இஸ்ரேல் அனுப்பியுள்ளது



45 பாலஸ்தீனர்களின் உடல்களை காஸாவுக்கு இஸ்ரேல் திருப்பி அனுப்பியுள்ளது என ஹமாஸ் சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது. போர்நிறுத்த ஒப்பந்தப்படி ஹமாஸ்"கு இதுவரை 270 பேரை இஸ்ரேல் ஒப்படைத்துள்ளது. (ஐ)

## அணு ஆயுத சோதனை செய்யவில்லை அமெரிக்கா புகாருக்கு சீனா மறுப்பு



அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்ப் பேட்டி ஒன்றில், சீனா உள்ளிட்ட நாடுகள் பூமிக்கடியில் அணு ஆயுத சோதனைகளை நடத்தி வருவதாக தெரிவித்த குற்றச்சாட்டை சீனா மறுத்துள்ளது.

இதுகுறித்து, சீன வெளியுறவுத்துறை நேற்று வெளியிட்ட செய்தியில் கூறியுள்ளதாவது:

சீனா ஒரு பொறுப்பான அணு ஆயுத நாடாகும். அணு ஆயுதங்களை 'முதலில் பயன்படுத்த மாட்டேன்' என்ற தன் நீண்டகால கொள்கையில் சீனா உறுதியாக உள்ளது.

எந்த சூழ்நிலையிலும், எந்த நேரத்திலும் அணு ஆயுதங்களை முதலில் சீனா பயன்படுத்தப் போவதில்லை என்பதை இதன் வாயிலாக உறுதியளிக்கிறோம்.

சீனா ஒரு தற்காப்பு அணுசக்தி கொள்கையை கடைப்பிடித்து வருகிறது-. மேலும், அணு ஆயுத சோதனைகளுக்காக தானாக விதித்துக்கொண்ட தடையை பின்பற்றி வருகிறது.

இதேபோன்று, உலகளாவிய அணு ஆயுத சோதனைகள் மீதான தடையையும், அணு ஆயுத பரவல் தடுப்பு முறையையும் பாதுகாப்பதற்கான அதன் உறுதிமொழிகளை அமெரிக்கா உண்மையுடன் கடைப்பிடிக்க வேண்டும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

அணு ஆயுத சோதனைகளை மீண்டும் துவங்க வேண்டும் என்று அமெரிக்க ராணுவத்துக்கு, அதிபர் டொனால்டு டிரம்ப் உத்தரவிட்டுள்ளார். சீனா, ரஷ்யா, பாகிஸ்தான் உள்ளிட்ட நாடுகள் ரகசியமாக அணு ஆயுத சோதனைகளை மேற்கொள்வதை இதற்கு காரணமாக அவர் கூறியுள்ளார்.

இந்நிலையில், அமெரிக்கா முதலில் முழுமையான அணு ஆயுத சோதனையை துவக்கினால், ரஷ்யாவும் பதிலுக்கு சோதனையை துவங்கும் என, ரஷ்யா வெளிப்படையாக எச்சரித்துள்ளது. அணு ஆயுத சோதனை தடை ஒப்பந்தத்தின் உறுதிப்பாட்டை அமெரிக்கா மதிக்க வேண்டும் என, தற்போது சீனாவும் வலியுறுத்தியுள்ளது.

டிரம்பின் இந்த அறிவிப்பு, உலகளாவிய அணு ஆயுத கட்டுப்பாட்டு கட்டமைப்பை பாதிக்கும் என்ற அச்சத்தின் காரணமாக, பெரும்பாலான நாடுகள் மற்றும் அமைப்புகள் கண்டனம் தெரிவித்துள்ளன. (ஐ)

## 6.4 ரிக்டர் நிலநடுக்கம் பெரிய பாதிப்பு இல்லை



ரஷ்யாவில், 6.4 ரிக்டர் அளவில் சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. கம்சட்கா தீபகற்பத்தின் தென்கிழக்கு கடற்கரையில் இந்த நிலநடுக்கம் பதிவானதாக ஜெர்மன் புவியியல் ஆய்வு மையம் அறிவித்துள்ளது. நிலநடுக்கம் 24 கி.மீ.,ஆழத்தில் ஏற்பட்டதாகவும் தெரிவித்துள்ளது.

ரஷ்யாவின் கம்சட்கா தீபகற்பம், பசிபிக் பெரும்பகுதியைச் சுற்றியுள்ள நெருப்பு வளையத்தில் அமைந்துள்ளதால் அடிக்கடி இங்கு நிலநடுக்கம் மற்றும் எரிமலை சீற்றம் போன்றவை ஏற்படுவது குறிப்பிடத்தக்கது.

நேற்று ஏற்பட்ட நிலநடுக்கத்தில் பெரிய அளவு பாதிப்பு ஏற்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## புதுடில்லியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தொழில் துறை கொள்கை மற்றும் டிஜிட்டல் ஆளுகை தொடர்பில் இந்தியாவின் சாதனைகளைப் பாராட்டிய எதிர்க்கட்சித் தலைவர், ஒப்பீட்டு ரீதியாக நிலைத்தன்மை காணப்பட்ட போதிலும், இலங்கை இன்னும் வெளிநாட்டு கையிருப்புக்களை மீண்டும் கட்டியெழுப்புதல், ஏற்றுமதிகளை பன்முகப்படுத்தல் மற்றும் வறுமை ஒழிப்பு உள்ளிட்ட முக்கிய சவால்களை எதிர்கொண்டு வருகின்றது என்றும் தெரிவித்தார்.

வெளிப்படையான மற்றும் நம்பிக்கை அடிப்படையிலான ஒத்துழைப்பின் அவசியப்பாடு தொடர்பில் இரு தரப்பினரும் இங்கு இணங்கிக் கொண்டனர்.

கூட்டு முயற்சியாண்மைகள் மற்றும் தொழில்நுட்ப பரிமாற்றத்தை ஊக்குவிப்பதற்கு இந்தியா - இலங்கை தொழில் நுட்பம் சார் கைத்தொழில் வலயத்தை உருவாக்கும் யோசனையை எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ இதன்போது முன்வைத்தார்.

நவீன வர்த்தக யதார்த்தங்களுக்கு ஏற்றவாறு இந்திய - இலங்கை சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தை புதுப்பித்துக் கொள்வதற்கும் இதன்போது எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ அழைப்பு விடுத்தார்.

## யாழில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

எனும் இரண்டு பிள்ளைகளின் தந்தையே உயிரிழந்துள்ளார்.

மோட்டார் சைக்கிளில் பயணித்த அவர், கனரக வாகனத்தை முந்தியச் செல்ல முற்பட்ட வேளை எதிரே வந்த மோட்டார் சைக்கிளுடன் மோதி கீழே வீழ்ந்துள்ளார். இதன்போது கனரக வாகனம் அவர் மீது மோதியுள்ளது.

உயிரிழந்த நபரின் சடலம் பிரேத பரிசோதனைக்காகத் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

இந்த விபத்து தொடர்பில் தெல்லிப்பழை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## அம்பலாங்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

படுகாயமடைந்த வர்த்தகர், பலப்பிட்டிய ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

55 வயதான நிலந்த வருஷ விதான என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

துப்பாக்கிதாரிகள் வந்த கார் வேறொரு இடத்தில் கைவிடப்பட்டிருந்த நிலையில் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவத்தில் உயிரிழந்தவர், பல்வேறு குற்றச்சாட்டுக்களுடன் தொடர்புடைய கரந்தெனிய சுத்தா என்பவரின் மைத்துனர் எனத் தெரியவருகின்றது.

இது தொடர்பில் நான்கு பொலிஸ் குழுக்கள் விசாரணை வேட்டையில் இறங்கியுள்ளன என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

## யாழில் 950....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கஞ்சாவையும் தீயிட்டு அழிக்க மன்று உத்தரவிட்டது.

அதன் அடிப்படையில் கோம்பயன் மணல் மயான மின் தகன மேடையில் கஞ்சா போதைப்பொருள் தீயிட்டு முற்றாக அழிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்ற நீதிவான் மற்றும் மேலதிக நீதிவான் ஆகிய இருவரின் நேரடிக் கண்காணிப்பில் கஞ்சா அழிக்கப்பட்டது.

## போதைப்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இந்த நிகழ்வில், நாடாளுமன்ற உறுப்பினர் க.இளங்குமரன், யாழ். மாவட்ட செயலாளர் ம.பிரதீபன், சாவகச்சேரி பிரதேச செயலாளர் சத்தியசோதி, நகர சபை தவிசாளர், பிரதேச சபை தவிசாளர், அரச அதிகாரிகள் உட்படப் பலரும் கலந்துகொண்டனர்.

இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அமைச்சர் இவ்வாறு அழைப்பு விடுத்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்,

"போதைப்பொருள் விற்பனையாளர்கள், கஞ்சா கடத்துபவர்கள் மற்றும் வாள்வெட்டுக் குழுவினரால் யாழ். மாவட்டம் சீரழிந்து வருகின்றது. எனவே, இவற்றுக்கு முடிவு கட்டி, சமூக நிலைமையைத் தோற்றுவிக்குமாறு யாழ். மாவட்ட மக்கள் கோரிக்கை விடுத்தனர். தற்போது போதைப்பொருள் கும்பல் மற்றும் பாதாளக் குழு உறுப்பினர்களின் செயற்பாடுகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டு வருகின்றது.

போதைப்பொருளுக்கு எதிரான கூட்டு நடவடிக்கை நாடு தழுவிய ரீதியில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. பாதாளக் குழு பின்னணியில் கறுப்பு நிர்வாகப் பொறிமுறையொன்றே உள்ளது. இதற்கு உதவும் சில நபர்கள் எல்லா இடங்களிலும் இருக்கவே செய்கின்றனர். இதன் பின்னணியில் கறுப்புப் பணம் புகுந்து விளையாடுகின்றது.

இந்நிலைமையைக் கண்டும், காணாததுபோல் இருக்க முடியாது. அது எமது இளைய தலைமுறையினருக்கு இழைக்கும் பெரும்துரோகமாகும். எனவே, யுகத்துக்கு முடிவு கட்டப்படும். மக்களால் சட்டப்பூர்வமாக செயற்படும் அரசாங்கம்தான் நாட்டை ஆள வேண்டும். கறுப்பு உலகத்தால் நிர்வாகத்தை முன்னெடுக்க இடமளிக்க முடியாது.

மக்களுக்காகச் செயலாற்றுவதே எமது அரசாங்கத்தின் நோக்கம். ஊழல், மோசடிகளற்ற தூய நிர்வாகத்தை நோக்கிய பயணத்துக்கு அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். குறிப்பாக அரசாங்க ஊழியர்கள் தமது ஒத்துழைப்பை வழங்க வேண்டும். அரச ஊழியர்களுக்குரிய அத்தனை வசதிகளும் செய்து கொடுக்கப்படும்.

போதைப்பொருளுக்கு முடிவு கட்டுவதற்குரிய சமர் ஆரம்பமாகியுள்ளது. இந்தச் சமரை கண்டு அஞ்ச வேண்டாம். அதற்குப் பேராதரவு தாருங்கள். மக்களுக்குத் தகவல் தெரியும். அதனை உரிய தரப்பினருக்கு அறிவியுங்கள். எதற்கும் அஞ்ச வேண்டாம். இளைஞர்களே முன்வாருங்கள், உங்களுக்குப் பின்னால் அரசாங்கம் நிற்கும். சண்டியர்களை நொண்டியர்களாக்குவோம்." - என்றார்.

## கிளிநொச்சி பாடசாலை ஒன்றில் முன்னெடுக்கப்பட்ட கவனயீர்ப்பு போராட்டம்!

கிளிநொச்சி வடக்கு கல்வி வலயத்திற்குற்பட்ட புளியம்பொக்கணை கலவெட்டித்திடல் நாகேஸ்வர வித்தியாலயத்தில் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்று இன்றையதினம் முன்னெடுக்கப்பட்டது.

பெற்றோர்கள் மற்றும் பழைய மாணவர்கள் இணைந்து பாடசாலையின் நுழைவாயிலை மறித்து இந்த போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர்.

பெற்றோர்கள் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த காரணத்தால் மாணவர்களும் வகுப்பறைக்கு செல்லாது நுழைவாயிலில் காத்திருந்தனர்.

இதன்போது கிளிநொச்சி வடக்கு வலய திட்டமிடல் பிரதிக் கல்விப்பணிப்பாளர் குறித்த இடத்துக்கு வருகை தந்து பெற்றோர்களுடன் கலந்துரையாடி விடுமுறை நிறைவடைந்ததும் ஆசிரியர் வெற்றிடம் நிரப்புவதற்குரிய நடவடிக்கை எடுப்பதாக தெரிவித்திருந்தார்.

இதனையடுத்து பெற்றோர்களால் முன்னெடுக்கப்பட்ட போராட்டம் கைவிடப்பட்டது.

# ஜனாதிபதியை சந்தித்தார் பேராயர்



இலங்கைக்கு விஜயம் செய்துள்ள புனிதப் பீடத்தின் நாடுகள் மற்றும் சர்வதேச அமைப்புகளுடனான உறவுகளுக்கான செயலாளர் பேராயர் போல்ல் ரிச்சர்ட் கல்லாகர், ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்கவை செவ்வாய்க்கிழமை (04) சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

# சட்டவிரோத மீன்பிடிவாடிகளை அகற்றல்




திருகோணமலை திருக்கடலூர் கடற்கரையில் தனிநபர் ஒருவரால் சட்டவிரோதமாக அமைக்கப்பட்டிருந்த மீன்பிடி வாடி செவ்வாய்க்கிழமை (4) அன்று கரையோரப் பாதுகாப்பு மற்றும் கரையோர மூலவள திணைக்களத்தினரால் இடித்து அகற்றப்பட்டது.

கடற்கரையில் அமைக்கப்பட்டிருந்த இவ் கட்டுமானத்தை அகற்றுமாறு கூறி திணைக்களம் சென்ற ஆவணி மாதம் அகற்றல் உத்தரவை கட்டிடத்தில் ஒட்டியது.

எனினும் இதுவரை கட்டுமானம் அதை அமைத்தவரால் அகற்றப்படவில்லை.

இந்நிலையில் திங்கட்கிழமை (03) அன்று கட்டுமானம் திணைக்கள அதிகாரிகளால் இடித்து அகற்றப்பட்டது.

# பாடசாலை நேரம் நீடிப்பு: கால அவகாசம் வழங்கியது கூட்டணி



பாடசாலை நேரத்தை நீடிப்பது தொடர்பில் எடுத்திருக்கும் தீர்மானத்தை மாற்றுவதற்கு எதிர்வரும் 7 ஆம் திகதிவரை அரசாங்கத்திற்கு கால அவகாசம் வழங்குவதாக தெரிவித்துள்ள ஆசிரியர் அதிபர் தொழிற்சங்க கூட்டணி, அந்த காலத்துக்குள் மாற்றாவிடின், டிசம்பர் முதலாம் வாரத்தில் இருந்து தொடர்ச்சியாக வேலை நிறுத்த போராட்டம் முன்னெடுக்கப்படும் என்றும் அந்த கூட்டணி தெரிவித்துள்ளது.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைத்த போதே, அந்த கூட்டணியின் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்தார்.

2026 ஆம் ஆண்டு முதல், பாடசாலை நேரத்தை பிற்பகல் 2 மணி வரை நீடிப்பதற்கு கல்வி அமைச்சு தீர்மானம் எடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 04.11.2025 வெளியிடப்பெற்றது.